# ஒன்பதாம் வகுப்பு

## இயல் 4

## உயிர்வகை

ஆசிரியர்

தொல்காப்பியர்

# தொல்காப்பியம்

➢தொல்காப்பியத்தின் ஆசிரியர் தொல்காப்பியர்.

➢தமிழில் நமக்குக் கிடைத்துள்ள பழமையான நூல்.

➢இது ஒரு இலக்கண நூல்.

➢எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்று அதிகாரங்களைக் கொண்டது.

➢ஒவ்வொரு அதிகாரமும் ஒன்பது இயல்களைக் கொண்டது. மொத்தம் 27 இயல்கள்.

➢இந்நூலில் பல அறிவியல் கருத்துகள் உள்ளன.



# உயிர்வகை


ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றொடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே*
– தொல்காப்பியர் நூ.எ.1516

# பாடல் பொருள்

| அறிவுநிலை | அறியும் ஆற்றல் | உரையாசிரியர்களின் எடுத்துக்காட்டு |
|---|---|---|
| ஓரறிவு | உற்றறிதல் (தொடுதல் உணர்வு) | புல், மரம் |
| ஈரறிவு | உற்றறிதல் + சுவைத்தல் | சிப்பி, நத்தை |
| மூவறிவு | உற்றறிதல் + சுவைத்தல் + நுகர்தல் | கரையான், எறும்பு |
| நான்கறிவு | உற்றறிதல் + சுவைத்தல் + நுகர்தல் + காணல் | நண்டு, தும்பி |
| ஐந்தறிவு | உற்றறிதல் + சுவைத்தல் + நுகர்தல் + காணல் + கேட்டல் | பறவை, விலங்கு |
| ஆறறிவு | உற்றறிதல் + சுவைத்தல் + நுகர்தல் + காணல் + கேட்டல் +பகுத்தறிதல் (மனம்) | மனிதன் |

# வினாக்கள், செயல்பாடுகள்

1.தொல்காப்பியம் குறிப்பு எழுதுக.

2.தொல்காப்பியர் உயிரினங்களை எவ்வாறு வகைப்படுத்துகிறார்?

- தொல்காப்பியத்தில் உள்ள அறிவியல் கருத்துகளைக் கூறும் பாடல் ஒன்றினைக் கண்டறிந்து எழுதுக.